3. அரசினர் தீர்மானம்

அவையினர் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம் ஒன்றை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சரவர்கள் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, " தமிழ் நாடு சட்டப் பேரவை விதிகளைச் சேர்ந்த 221 (1)-வது விதியின் கீழ், 1968-69-ம் நிதியாண்டுக்குரிய அவையினர் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினொன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

4. அறிவிப்பு.

அவையினர் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (House Committee) உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 1968-ம் வருஷம் மார்ச் மாதம் 15-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1968-ம் வருஷம் மார்ச் மாதம் 16-ம் தேதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1968-ம் வருஷம் மார்ச் மாதம் 18-ம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினொன்றுக்கு, மேற்படுமாயின் 1968-ம் வருஷம் மார்ச் மாதம் 20-ம் தேதி புதன் கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

5. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 14—மருத்துவம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நிதிக் கோரிக்கை எண். 14—மருத்துவம், மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,46,99,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, மருத்துவ மனைகளின் சீரமைப்புப் பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.